# தீப நெறி

எல்லாம் செயல் கூடும்

தீபம் 7 நெறி 9 தமிழ் மாத இதழ் விலை ₹1 ஏப்ரல் 2017



## பட்டினியில்லா... நோயில்லா... குற்றமில்லா...

## வளமிக்க வையகத்தை வார்த்தெடுப்போம்!





அணையா அடுப்பு



அணையா அடுப்பில் அருள் உணவு



சத்திய தருமச்சாலையின் முகப்பு தோற்றம்



வடலூர் சத்திய தருமச்சாலை

**வடலூரில் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் தன் திருக்கரங்களால் ஏற்றிய அணையா அடுப்பின் 151-ம் ஆண்டு தொடக்க நாள் - 25.05.2017.**


## எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
## வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

# தலை வணங்குகின்றோம்...



வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் தங்கி தினசரி தன் சொந்த வேலைக்கும் சென்று அதன் மூலம் வரும் வருமானத்தில் ஒரு பாகத்தை வடலூர் தருமச் சாலைக்கும் மற்றொரு பாகத்தை தீபம் தருமச் சாலைக்கும் கொடுப்பதோடு அல்லாமல் தினசரி அதிகாலையில் அறுசுவை உணவுகளை தயார் செய்யும் தவத்திரு. பிரம்ம ஸ்ரீ பழனிச்சாமி அய்யா குடும்பத்தினரை தீபம் வாழ்த்துகிறது.

## " தீபநெறி " ஆசிரியர் குழு




**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757



அன்பின் பிடியுள்
**அர. இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



இலக்கியச்செல்வர்
**இளந்தேவன்**
அய்யப்பந்தாங்கல்
கைபேசி : 99400 92876



வள்ளலார் சிற்றடியேன்
**குருபக்கிரிசாமி**
ஆசிரியர் – அருட்சுடர்
வடலூர்
94428 12844



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635

# ...நித்ய தீப தருமச் சாலை...



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் பசியாற
தினந்தோறும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் அன்பர்கள்.



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் தினந்தோறும்
பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவிக்கும் காட்சி

# எதிர்காலம்

...நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்.... என தெய்வமணி மாலையில் வள்ளலார் நம்மை பாடச் சொல்கிறார். நமக்கு நோயே வரக் கூடாது என்பதாக இதைக் கொள்வது நியாயம். பல நோய் வந்தது. சிகிச்சைக்குப் பின் அது அற்றுப் போனது. பிறகு இன்னொரு நோய் வந்தது. அதற்கான சிகிச்சையை இப்போது பெற்றுக் கொண்டிருக்கிறேன். இதுவும் விரைவில் அற்றுப் போகும் என்பது மந்த நியாயம். இந்த மந்த நியாய வாழ்க்கையில் தான் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஏனென்றால், சுவாசிப்பதற்கு உகந்த காற்றோ, குடிப்பதற்கு உகந்த நீரோ, பூச்சிக்கொல்லி மருந்திடாத உணவோ நமக்கு கிடைப்பதில்லை. அன்றாட வாழ்வில் இயந்திரம் போல ஓடி, மன அழுத்தத்துடன், பல எதிர்பார்ப்புகளுடன், பல ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவைகள் நமக்கு நோயை தருகிறது. உண்மை இப்படி இருக்கும் போது 'நோயற்ற வாழ்வில் நான் வாழ' வேண்டும் என்று எப்படி பாடத் துணிவது? குறிப்பாக நமது சந்ததியர் இதைப் பாடவே முடியாது. இன்றைக்கு ஐம்பது வயதைக் கடந்து கொண்டிருப்பவர்கள், காற்றையும், நீரையும், நிலத்தையும் மாசுபடுத்த அனுமதித்து, அனுசரித்து, வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். உரிய நேரத்தில் தடுக்கப்படாததால் இவர்களின் சந்ததியர் (இப்போதைய இளைஞர்கள்) பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். அதில் ஒன்றையாவது சிந்திப்போமே!

இவ்வுலகின் மக்கட்தொகை 850 கோடி. இதில் குழந்தைகள், புலால் உண்ணாதவர், இறைச்சியை காசு கொடுத்து வாங்க வசதியற்றோர், மருத்துவர் சொற்படி புலால் விட்டவர், முதுமையினால் புலால் உண்ண முடியாதவர்கள் தொகை 350 கோடி. மீதியுள்ள 500 கோடி மக்கள் ஆண்டுதோறும் 950 கோடி எண்ணிக்கையிலான ஆடு, மாடு, குதிரை, ஒட்டகம், மான் போன்ற மிருகங்களைக் கொன்று உண்கின்றனர். ஒரு ஆண்டிற்கு 950 கோடி மிருகங்கள் கொல்லப்பட வேண்டுமானால் அடுத்தடுத்த ஆண்டுகளில் கொழுத்து வளர்ந்த மிருகங்கள் தேவைப்படும் என்பதால் மொத்த கால்நடைகளின் இருப்பு – Live stock – 5000 கோடியாகும். இதைப் பராமரிப்பதற்காக இந்த உலகம் என்னவெல்லாம் இழக்கிறது தெரியுமா?

**நிலம் :** ஒரு மனிதன் வாழ்வதற்கான, நெல், பருப்பு, காய்கனி போன்றவை பயிரிட அரை ஏக்கர் நிலம் போதும். ஆனால் ஒரு ஆடு அல்லது மாடு மேய, வளர நான்கு ஏக்கர் நிலம் வேண்டும். எனவே காடுகள் அழிந்தன. வனம் என்பது பாலைவனமானது. இதனால் புவி வெப்பம் GLOBAL WARMING ஏறிக் கொண்டே போகிறது. பருவமழை இல்லலமல் போனது. ரசாயன உரம் என்ற பெயரால் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தி விளைநிலத்தில் அரையடி உயரத்திற்கு நச்சுத்தன்மையுள்ள மண்தான் இருக்கிறது. இது நமது Genetic organ களை பாதித்து குழந்தையில்லாமலோ, குறையுள்ள குழந்தையோ பிறக்க முதற்காரணமாயும் Hi - breed / Seedless ரக உணவுகள் இரண்டாவது காரணமாயும் இடம்பிடித்துள்ளது. இதை சாதகமாக்கி சாதாரண மனிதன் நெருங்க முடியாத நிலையில் ஆர்கானிக் தானியம் / காய்கறிகளை ஏசி ஷோ ரூம்களில் ஐந்து மடங்கு விலையில் விற்கத் தொடங்கி விட்டோம். இந்த 5000 கோடி மிருகங்களின் சிறுநீரும் சாணமும் இம்மண்ணில் ஊறி நிலத்தடி நீரை மஞ்சள் நிறமாக்கி விட்டது.

**காற்றுறு காற்றாய்க் கானிலைக் காற்றாய்**
**ஆற்ற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி (344)**

**நீர் :** ஒரு கிலோ இறைச்சி, நீங்கள் உண்ணும் மேசை மீது (on the dining table) சமைத்து வைக்கப்படும் வரை, அது 50,000 லிட்டர் நீரை உறிஞ்சியிருக்கிறது. (ஒரு கிலோ நெல் விளைய 9,000 லிட்டர், ஒரு கிலோ கோதுமை விளைய 4,000 லிட்டர் நீரும் தேவை). எனவே சராசரி 50 கிலோ எடையுள்ள 3,00,00,000 மிருகங்கள் 50,000 லிட்டர் நீரை உபயோகித்த பின்னரே நாள்தோறும் வெட்டப்படுகிறது. (இது 7,50,000 TMC per day – TMC – Trillion meter cube) இது கடல் நீரோ, உப்பு நீரோ, மஞ்சள் நிற நீரோ, Recycle நீரோ அல்ல. மிருகங்கள் இதை தொடாது.

**காற்று :** ஒரு நடுத்தர நான்கு சக்கர டீசல் வண்டி ஒரு நாளைக்கு எவ்வளவு மாசு வெளிப்படுத்துகிறதோ, அதே அளவு மாசு ஒரு ஆடு வாழும்போது தினமும் வெளிப்படுத்துகிறது. அது வெளிவிடும் காற்றிலும் கார்பன்டை ஆக்ஸைடு (கரியமில வாயு) இருப்பதால் அதை உள்வாங்கி ஆக்ஸிஜன் (பிராணவாயு)வை வெளிப்படுத்தும் தன்மையுள்ள மரம், செடி, கொடிகளிலுள்ள இலைகளின் (Chlorophil) பச்சயம் என்ற பொருள்தான், ஆனால் அந்த இலைகளை அது ஏற்கனவே மேய்ந்து விட்டதால் சோலைவனங்கள் பாலைவனமாகி விட்டது. புல் பூண்டு கூட தரையில் இல்லை. இதன் விளைவால் காற்று மண்டலத்தில் ஓசோன் (Ozone) ஓட்டை விழுந்து, சூரியனின் அல்ட்ராவைலட் கதிர்கள் நேரே பூமிக்கு வருவதால் அது கருவிலுள்ள குழந்தைகளின் மூளை, கண், காது, பிற உறுப்புகளில் குறை ஏற்படுத்துகிறது. பேச்சு திறன் இல்லாமல் Dumbness போகிறது. மொத்தத்தில் சுவாசிக்கத்தக்க காற்றே இல்லாமல் போய்விட்டது.

**ஏற்றுமதி :** மேலை நாட்டவர் பல விஷயங்களில் தந்திரசாலிகள். இந்த கால்நடைகளால் ஏற்படும் நிலம், நீர், காற்று மண்டல மாசு அந்தந்த நாட்டிலேயே தேங்கட்டும் என முடிவு செய்து இறைச்சி, தோல் ஆகியவற்றை மட்டும் இறக்குமதி செய்து கொள்கின்றனர். ஏற்றுமதி செய்யும் நாட்டினரின் மதி மங்கித்தானிருக்கிறது.

**நாளை எப்படி? :** நிலம் கெட்டதால் ஆர்கானிக் உணவை ஐந்து மடங்கு விலை கொடுத்து வாங்குகிறோம். கேன் வாட்டர் விலை கொடுத்து வாங்குகிறோம். பல தரமற்ற நிறுவனங்கள் இந்த தண்ணீரை சுத்தப்படுத்துவதற்கும், சுவையை மாற்றுவதற்கும் என்னென்ன ரசாயனப் பொருள் உபயோகப்படுத்துகின்றன என்பது விரைவில் தெரியும். இன்னும் ஐந்தாண்டுகளில், சமையல் எரிவாயு வாங்குவதைப் போல சுவாசிப்பதற்கு காற்று, ஆக்ஸிஜன் போன்றவைகளும் சிலிண்டர்களில் அடைத்து விற்பனை செய்யப்போவது உண்மை. மருத்துவரும் அதற்கான பிரிஸ்கிரிப்ஷனை எழுதித் தரப் போவதும் உண்மை!

**இயல்பு என்ன? :** பூனை, நாய், புலி போன்ற மிருகங்கள் மாமிசம் சாப்பிட்டு வாழ வேண்டியிருப்பதால் இயற்கையின் படைப்பில் அவைகட்கு கோரைப்பல், மேலும் கீழும் மட்டும் அசையும் தாடை, அமிலத்தை ஆதாரமாக (Acid Base) கொண்ட ஜீரண உறுப்புகள், தொங்கும் மெல்லிய நாக்கினால் தண்ணீரை சிறிது நக்கி நாக்கை நனைத்துக் கொள்ளும் இயல்புள்ளவை. ஆனால் மனிதனுக்கு கோரைப்பல் கிடையாது. பக்கவாட்டிலும் அசையும்

தாடை, காரத்தை ஆதாரமாக (ALKALINE BASE) ஜீரண உறுப்புகள், உள்ளடங்கிய நாக்கினால் கணிசமான நீரைக் குடிக்கும் இயல்பு கொண்டவன். எனவே மனிதனின், உடலமைப்பு மாமிசம் உண்ணும் அடிப்படையில் இல்லவே இல்லை!

**வழிதான் என்ன? :** 850 கோடி மக்கட்தொகை கொண்ட இவ்வுலகத்தவரின் பால், தயிர் போன்ற தேவைகட்கு 400 கோடி அளவிலான பசு, எருமை இருந்தால் போதுமானது. அவைகளின் மொத்த இருப்பு LIVE STOCK 1000 கோடிக்குள் இருந்தால் போதும். இது செயலாக்கப்பட்டால், இவைகளால் இதுவரை தினமும் வெளியிடப்பட்ட மாசு அளவில் இருபது சதவிகிதமும் வெளியாகும். இந்தச் சூழல் தொடர்ந்தால் இன்னும் சில ஆண்டுகளில் மாசு கட்டுப்பட்டு அதற்கென பரிந்துரைக்கப்பட்ட எல்லைக்குள், அளவுக்குள் இருக்கும்.

**அதுவரை? :** வள்ளுவர் காலம் தொடங்கி வள்ளலார் காலம் வரை வலியுறுத்தப்பட்ட புலால் மறுத்தல் என்பது ஏதோ ஆன்மிகம் என்னும் உலகீரே! சிந்திப்பீர். அது அறிவியல். புள்ளிவிவரம். எனவே இதுவரை ஒதுங்கியிருந்தது போதும். புலால் உணவை அறவே ஒதுக்குங்கள். ஏனென்றால் உங்கள் சந்ததியினரை அது தாக்கத் தொடங்கிவிட்டது. நீங்கள் செயல்பாட்டில் இறங்கி உறுதிமொழி சொல்லும்வரை அவர்களின் ஆரோக்கியம் என்பது (ஐம்பதாண்டுகட்கு மேலாக காற்றில் கலந்த பாடலாய்) ஒரு தெளிவும் அறியாது, முடிவும் தெரியாது, மயங்குது எதிர்காலம்!

**கே.என். உமாபதி**
கைபேசி : 95518 49757

---

# தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

## விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்

### தீபநெறி மாதஇதழ்

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற

முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு

**முகவரியை** SMS / Whatsapp செய்யவும்.

# சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் பல்லாவரத்தில் பார்வையற்றவர்களுக்காக நடந்த மருத்துவ முகாமும் அன்னதானமும்


















# அருட்பெருஞ்சோதி அகவல்

## அனுபவப் பொருள் விளக்கம்

**திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா**

### ஒளவிய மாதி தவிர்த்த இயல்

25. ஒளவிய மாதியோர் ஆறுந் தவிர்த்த பேர்
26. அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) திருவருளால் மனம் என்னும் பகுத்தறியும் ஆற்றல் பெற்றது மக்களினம். இதனால் மனிதன் தன்னைச் சூழ இருக்கும் உலகுயிர்ப் பொருள்களைப் பற்றியும், ஆற்றல் இயக்கங்களைப் பற்றியும், அகப்புற இயல்புகளைப் பற்றியும் பலகாலமாக ஆராய்ந்து அரும்பெரும் உண்மைகளை அறிகின்றான். அப்படி அறியலான உண்மைகளில் சிறந்ததுதான் ஆன்மக்கடவுள் ஞானமாம். ஆதியில் இந்த ஞானம் முழுமையாக வெளிப்படவில்லை. மன உணர்வு புலன்வாயில் சென்று புற ஆராய்ச்சியில் இறங்கி, உண்மை காண வழி துறை தெரியாது மருட்கற்பனைகளில் உழன்று கொண்டிருந்தது. உழலும் மனம் ஒருமையுற்று, சலனமற்று, உள்ளொடுங்கி நிற்கும்போது, அதுவரை காணாத, அகமறைந்து கிடந்த உண்மை பல வெளிப்பட்டன, அவ்வெளிப்பாடுகளின் விளைவே ஆன்மக்கடவுள் தத்துவம். சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இது வெளியாகி விட்டது.

ஒருமை மனத்தால் உட்கூடி உலைவற்றிருந்த மனிதனுக்குப் பேராற்றல் கிடைத்தது. அவ்வாற்றல் சாதாரண மனித தரத்திற்கு மேற்பட்ட தெய்வீகத்தன்மை கொண்டதாயுணர்ந்து அதனை அக ஆன்ம சக்தி என்றும், கடவுள் அருள் விசேட சக்தி என்றும் போற்றிக் கொண்டனர் ஆன்றோர், அவ்வகப் பெருஞ் சக்தியின் உண்மையை மனத்தூய்மையின் அளவுக்குத்தகவே கண்டு கொள்ளப்பட்டது, மனத்தூய்மை என்பது மாசு நீங்கி, தேசு என்னும் இறையருட்டன்மை சார்ந்த நிலையாம். அருள் ஒளியாம் கடவுள் தேசை மறைத்துள்ளது மருள் இயல் அவா முதலிய மாசாம். சுத்த அன்பு அல்லது தயவு பெருகப் பெருகத் தான் ஆண்டவரின் அருளியல் உண்மை வெளிப்பட்டு நிறைவு பெற உள்ளது.

நிறை யன்பு சேரா இறை ஞானம் குறை ஞானமாகவே இருந்து வந்தது, இப்பொழுது அன்பால் அருள் உண்மை வெளிப்பட்டு, ஆண்டவர் விளக்கம் அருட்பெருஞ்ஜோதி ஆகக் கண்டு போற்றிக் கொள்ளப்படுகின்றது. இதனையே அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி எனப்படுகின்றது. அவ்வியல் என்றால், அகர உண்மை கொண்ட கடவுளின் மெய்யறிவின்ப அருட்பெருந் தன்மையாகும். இப்படி அருட்பெருங் கடவுளைக் கண்டு போற்றுகின்றவர்கள் யார் என்றால், அவர்கள் தாம் ஒளவியம் ஆதி ஆறும் தவிர்த்த பேர்களாம். ஒளவியமாவது பொறாமை என்ப; இது மாச்சரியமாகவும் உரைக்கப்படும். இது காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் எனப்படும் ஆறின் ஈற்றில்

**புனலுறு புனலாய்ப் புனல் நிலைப் புனலாய்**
**அனை எனப் பெருகும் அருட்பெருஞ்ஜோதி (352)**

உள்ளது. இவை ஆறும் மருள்நிலையில் உட்பகையாக, உண்மை கண்டுகொள்ளத் தடையாக, அருள் உண்மை ஞானத்திற்கு இடையூறாக இருப்பனவாம். இந்த அகப்பகை ஆறையும் வெல்லற்கு, ஆறியல் இறையைச் சாருதல் வேண்டும். அவ்வாறு குண இறைவனைப் பகவன் அல்லது பகவான் என்பர். பகவனின் இயல் ஆறாவன ; வீரியம், ஞானம், செல்வம், புகழ், ஈசுரத் தன்மை, அவாவின்மை ஆம். இவை ஆறும் மூலமுதல் ஆறு ஆதாரத்தெழும் சக்திகளாம். இவற்றின் பயன் யோகானுபவ சித்தியில் ஏகதேசம் விளங்குவதேயாம். சுத்த சன்மார்க்கியின் அனுபவம் மேனிலையில் ஆறியல் அருட்பெருஞ்ஜோதியினால் மட்டும் கைகூடும். நம் சுத்த நெறிக்கு ஜீவதயவே அடிநிலையாய் இருக்கின்றதால், அந்தத் தயவினால் ஞானக்கண்ணைத் திறப்பித்துக் கொள்ள வேண்டியது முதன்மையாம். தயா ஞானம் உண்டாகிச் செயல்படும்போது பொறாமை என்னும் ஔவியமாதி ஆறும் அகல்வது அனுபவமே. முன் ஞானியர்க்கு இந்த அருளனுபவம் மேனிலை நின்று உ;ணடாகாததால், மருட்போத கீழாதார அனுபவத்தால் ஆறியல் கடவுள் உண்மை உள்ளவாறு கண்டடைய. முடியாதிருந்தது, அனுபவமெல்லாம் சமயமத யோகானுபவ எல்லையுட் குறுகிக் கிடந்ததாம். இத்தருணம்தான் சுத்த சன்மார்க்கத்தால் அருட்பெருஞ்ஜோதியைப் போற்றிப் பெரும் பயன் அடைகின்றோம்.

---

## தீபம் அறக்கட்டளையின் அன்ன தருமச்சாலைகள்




1. வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை.
2. வேளச்சேரி நடமாடும் தருமச்சாலை.
3. சென்னை கல்குட்டை தருமச்சாலை.
4. சென்னை கந்தன் சாவடி தருமச்சாலை.
5. திண்டிவனம் கொஞ்சிமங்களம் தருமச்சாலை.
6. காஞ்சிபுரம் செய்யார் இருங்கூர் தருமச்சாலை.
7. திண்டிவனம் கேணிப்பட்டு தருமச்சாலை.
8. செஞ்சி தேவதானம்பேட்டை தருமச்சாலை.
9. செஞ்சி கெங்காவரம் தருமச்சாலை..

மேலும் வருகிற 25.05.2017 அன்று கும்பகோணம், சுவாமிமலை, ஈரோடு, பாண்டமங்களம், இராமநாதபுரம் முதுகுளத்தூர் உள்பட பத்து தர்மச்சாலைகள் தொடங்க தீபம் அறக்கட்டளை திருவுள்ளம் கொண்டுள்ளது என்பதை தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தர்மம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

## சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் ஆன்மநேய அறப்பணியில் ஆடுகின்ற சேவடிகள்









புவி உறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய்
அவைகொள விரிந்த அருட்பெருஞ்ஜோதி (356)

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் 8 & 9 வது தருமச்சாலை திறப்பு விழா மற்றும் 1000 அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல்**

**இடம் : செஞ்சி ஒன்றியம் தேவதானம்பேட்டை மற்றும் கெங்காவரம்.**










# கோடை வெயிலுக்கு இதமான குளிர்பானம்







சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பாக கொளுத்தும் கோடை வெய்யிலுக்கு இதமாக வேளச்சேரி காந்தி ரோடு அருகில் குளிர்பான பந்தல் அமைத்து 1400 அன்பர்களுக்கு (Pina colada) குளிர்பானம் வழங்கப்பட்டது.
நாள் : மார்ச் 21, 2017 செவ்வாய்க்கிழமை

# மனிதநேயமும் கடந்த ஆன்மநேயம்...



கல்பாக்கத்தை அடுத்த கூத்தப்பாக்கத்தைச் சேர்ந்த பார்வையற்ற விஜய் என்ற இளைஞருக்கு கண் அறுவை சிகிச்சைக்காக தீபம் அறக்கட்டளையின் சார்பில் ரூ. 10000-க்கான காசோலையை சங்கர நேத்ராலயா மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டயையின் சார்பாக பார்வையற்ற ஆபிரகாம் என்பவருக்கு குடிசை வீடு கட்ட ரூ. 6000 வழங்கப்பட்ட காட்சி.

## கோவை கோட்டைபாளையம் சத்திய ஞானசபை திறப்பு விழா



கோவை கோட்டைபாளையம் சத்திய ஞானசபை திறப்பு விழாவில் கலந்து கொண்ட ஓம் சக்தி மாத இதழின் ஆசிரியர் தயவு சிதம்பரநாதன் அய்யா அவர்களுடன் தீபத்தின் நிர்வாகிகளும் தன்னார்வ தொண்டர்களும். அருகில் தயவு இராமதாஸ் அய்யா.







## இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே...







சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் தருமச்சாலைகளில் ஒன்றான கல்குட்டை தர்மச்சாலையில் பசியாறும் குழந்தைகளும் மற்றும் பொதுமக்களும்.

புவிநிலை சுத்தமாம் பொற்பதி அளவி
அவை உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (366)

## மக்கள்...யார்?
## இவர் தம் தேவைகள் யாவை??

இதென்ன அர்த்தமற்ற கேள்வி என்ற வினாவால் உடனடி தாக்குதல் நடத்த விரும்புவோர் பலர் இருப்பர். பொருள் பொதிந்த விழைவுதான் என்று சிலரது சிந்தனை தூண்டப்படலாம்.

மக்களின் தோற்றம் பற்றியோ - மக்கள் தொகை பெருக்கம் பற்றியோ - மக்களின் முன்னேற்றங்கள் பற்றியோ சிந்திப்பது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல.

மக்களின் தரம் - அக நாகரிகம் பற்றிய சிந்தனையின் வெளிப்பாடுதான் இக்கட்டுரை.

மக்கள் என யாரைச் சுட்டலாம். யாரைப் பின்பற்றலாம் அவர்தம் தேவைகள் யாவை? அந்தத் தேவைகள் நிறைவேற்றத்தில் தயக்கம் ஏன்? தாமதம் ஏன்?? வரலாற்றுச் சுவடிகளை யெல்லாம் புரட்டித் திறனாய்வு மேற்கொள்வது தேவையான பயனைத் தந்ததாகத் தெரியவில்லை. கடந்த காலம் கடந்து விட்டது. திரும்பி வரப்போவது இல்லை.

ஆகவே, நேற்றைய மக்கள், இன்றைய மக்கள் - நம் நினைவில் நன்கு தங்கியுள்ள சென்ற நூற்றாண்டு 1910லிருந்து இன்று வரை, ஒரு நூற்றாண்டு மக்களைப் பற்றி சிந்திப்பதுதான் நமது நோக்கம். முந்தைய நூற்றாண்டுகளின் மக்கள் பற்றி நாம் நிறையவே தெரிந்துதான் வைத்துள்ளோம். நேற்றைய மக்களின் மாண்பு - நெறிபிறழா வாழ்வு - நேற்றைய நூல்களின் சிறப்பு பற்றித்தானே பேசிப் பேசி பெருமூச்சு விடுகிறோம்.

இன்று நாம் எப்படி இருக்கிறோம்? நலமாகவா இருக்கிறோம்? நலம் கெட்டு புழுதியில் அல்லவா புரண்டு கொண்டிருக்கிறோம். ஏன் இந்த அவலம்? சீர்திருத்தம் பற்றி சிந்திக்கக் கூடத் தயங்குகிறோமே ஏன்? இன்று நாம் பார்த்துப் பழகிக் கொண்டிருக்கும் மக்களை உங்கள் மனக்கண் முன் திரையிடட்டுமா?

உழைக்கும் மக்கள் - உழைப்பை உறிஞ்சிடும் மக்கள். உருவாக்கும் மக்கள் - உருக்குலைக்கும் மக்கள் - தேவைக்குத் திண்டாடும் மக்கள் - தேவைக்குப் பன்மடங்காக திரட்டிடும் மக்கள் - இரந்துண்ணும் மக்கள் - விருந்துணவை வீணாக்கும் மக்கள் - பார்வையற்ற மக்கள்-பார்வையின் பயன் அறியா மக்கள் - மதுவை விட மறுக்கும் மக்கள் - மதுவிலக்கை பற்றி முழங்கிடும் மக்கள். பட்டியல் முடியவில்லை...

இனி வருபவர்களும் உங்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள்தான். சென்ற நூற்றாண்டு மக்களை விட பற்பல புதுமைகளை சாதித்துக் கொண்டிருப்பவர்கள், நாம் பார்த்துப் பழகிக் கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டு மக்கள். கொஞ்சம் உற்றுப் பாருங்கள். நடுநிலையோடு, நிதானமாக, ஆழ்ந்து சிந்தியுங்கள். மேலோட்டமான பார்வையை, அவசர முடிவுகளை உணர்ச்சி ததும்பிய முழக்கங்களை தவிர்க்க முயலுங்கள்.

இந்த நூற்றாண்டுக்கே உரித்தானவைகளில் முதலிடம் பெறுவது போராட்டங்கள். போராட்டங்கள் தான் ஒரே தீர்வா? போராட்டங்களால் நாம் பெற்றது என்ன? இழந்தது எவ்வளவு? சிந்தியுங்கள்.

**மண்ணினில் திண்மையைவகுத்து அதில்கிடக்கை**
**அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (368)**

போராட்டங்களில் கலந்து கொள்ளும் பலருக்கு ஏன் கலந்து கொள்கிறோம் என்பதே தெரியாது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. விரும்பத்தகாத ஒரு கலாச்சாரம் வேகமாகப் பரவுகிறது. இதன் விளைவுகள் நலம் வழங்குவதை விட நலிவை நோக்கித்தான் நம்மை நகர்த்தும். நடத்தப்படுகின்ற போராட்டங்கட்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் தவறாமல் வந்து ஆதரவு தெரிவிக்கின்றனரே, இவர்கள் கொஞ்சம் தாராளமாக சிந்தித்து தங்களிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து எறிந்துவிட்டு, ஒன்றுபடலாமே!

கட்சிகள் குறைந்தாலே போராட்டங்கள் குறையும். மக்களின் குழப்பங்கள் மறையும். மக்கள் பால் உங்கட்கு (கட்சித் தலைவர்கட்கு) இருக்கும் மாறாத அன்பு காரணமாக, மக்கள் மயக்கம் நீங்கிட, குழப்பம் விலகிட, தெளிவான சிந்தனைத் திறன் பெற வேண்டி நீங்கள் இணையலாமே!! ஏனெனில், உங்கள் முதற்பணி, தலையாய பணி மக்கள் முன்னேற்றம் அல்லவா? அப்படித்தானே மேடை தோறும் முழங்குகிறீர்கள். உயிரைப் பணயம் வைப்பதா வீரம்? உடலைப் புண்ணாக்கிக் கொள்வதா வீரம்? காளை இனங்களைக் காப்பாற்றிட நமது இளங்காளைகள் சீறிப் பாயும் காளைகளால் மிதிபடலாமா?

காளை இனங்களைக் காப்பாற்ற வேறு வழிகளைக் காணலாமே. புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம் என்று வீரத்திற்கு இலக்கணம் சொன்னாள் ஔவை. நெரிசலில் நசுங்கி, தங்கள் பக்தியை வெளிப்படுத்த, பாபங்களை நிவர்த்தி செய்திட ஒரே இடத்தில் - ஒரே நாளில் - ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கில் (பாதுகாப்பு பற்றிய சிந்தனையே இல்லாமல்) கூடி அல்லல்படுவது தொடர்கதையாகிறது. பாபநிவர்த்திக்கு பரிதவிப்பதை விடுத்து, பாபம் செய்யாமலே வாழும் வகை காண முயலலாமே!

இந்த நூற்றாண்டின் மற்றுமோர் விந்தை : ஒரு பந்து. இரண்டு மட்டைகள். பெரிய திடல் - விறுவிறுப்பாக விளையாடும் வீரர்கள். ஐந்து நாட்கள் என ஆரம்பித்து ஐந்து மணி நேர ஆட்டமாக புதுப்புது வடிவமேற்று உலகெலாம் வலம் வருவது மட்டுமல்ல. ஆண்டு முழுதும் ஆரவார விழாக்கள்தான்! அரிதினும் அரிதான உலக அதிசயங்கள் பற்றிய உரைகளை புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய விஞ்ஞான விளக்கங்களை - வாழ்வியல் போதனைகளை, ஒரு சில நிமிடங்களேனும் முழு ஈடுபாட்டுடன் கேட்டு மகிழ்ந்திருப்போமா?

ஒரு பந்து - இரண்டு மட்டைகள் கொண்டு இன்றைய வீரர்கள் நிகழ்த்துகின்ற சாமர்த்திய - சாகஸங்கள் பற்றி சற்றேனும் சளைக்காமல் வர்ணிக்கின்ற வல்லுனர் குழுவும், ஆறு அல்லது எட்டு மணி நேரமும் ஆர்வத்தோடு கேட்டு ஆரவாரிக்கின்ற இன்றைய மக்களின் மனப்பாங்கு இந்த நூற்றாண்டின் விந்தையன்றோ?

பழைய பழக்கங்கள், பாரம்பரியச் சடங்குகள் ஏதேனும் ஒன்றை, சிரத்தையும் - பக்தியும் குறையாத வண்ணம் சீர்தூக்கி, செம்மைபடுத்தியிருக்கிறோமா?? நேற்றைய நகலாகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல தரப்பட்ட, பற்பல திறன் மிக்க மக்களை மனக்கண்ணால் சந்தித்தோம். கொஞ்சம் சிந்திப்போமா? இவர்கள் யாரை நாம் முன்மாதிரியாகக் கொள்ளலாம்? யார் மீது பெருமதிப்பும் - ஈர்ப்பும் - நல்லெண்ணமும் ஏற்படுகிறது? குறைபாடுகள் குறைவாக இருப்பவர்களையாவது காண முடிகிறதா? மக்கள் பயணிக்க வேண்டிய பாதைதான் எது? எல்லார்க்கும் எல்லாம் எனும் இடம் நோக்கிப் பயணிப்பது தானே ஏற்கத்தக்கது.

நமக்கு நல்ல வழிகாட்டிகள் தான் வாய்த்தார்கள். ஆனால் நாமோ வழிதவறியே பயணிக்கிறோம். வழிகாட்டிகளின் சிறப்பு பற்றியே பேசினோம். பேசுகிறோம். அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களை மட்டுமே வியந்தோம். அவர்கள் காட்டிய பாதையை முற்றிலும் மறந்தே போய்விட்டோம். **வம்மின் உலகீர்** என்று அறைகூவல் விடுத்து வள்ளலார் ஓர் உன்னத வழியைக் காட்டினார்.

சன்மார்க்கம் – காருண்யம். காருண்யம் என்றால்?

வாடிய முகங்களைக் கண்ட கணத்தில் உள்ளம் வருந்துவது காருண்யமா? இது காருண்யத்தின் முதல் படி. வாடிய முகங்கள் மலர்ந்திட உதவுவது காருண்யத்தின் இரண்டாவது படி. மலர்ந்த அந்த முகங்கள் இனி ஒரு போதும் இலவசங்களை ஏற்க மாட்டேன் என உறுதி பூண வைப்பதுதான் காருண்யத்தின் மூன்றாவது படி. இன்னும் படிகள் உள்ளன. முதல் படியில் கால் பதித்து அண்ணாந்து நோக்குவோம். அருட்பெருஞ்சோதி வழிநடத்தும். அடுத்தபடி ஏறிட உதவும். உந்து சக்திகள் : எளிமை, தூய்மை, வாய்மை. எளிமை ஏழ்மையை போக்கிடும். தூய்மை நோய்களை அகற்றும். வாய்மை குற்றங்களை குறைத்திடும். காருண்ய மிக்கவரே மக்கள் எனக் கொள்வோம்.

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை / 8056438488

---

## அன்பான வேண்டுகோள்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் இனிய வந்தனங்கள் பல. நமது தீபம் அறக்கட்டளையின் சார்பில் தயாள உள்ளம் கொண்ட தங்களின் பேராதரவினால் ஒன்பது தர்மச் சாலைகள் இயங்கி வருகிறது. மேலும் பல தர்மச்சாலைகள் வருகிற (25-05-2017) அன்று துவங்கப்பட உள்ளது. கும்பகோணம், இராமநாதபுரம் முதுகுளத்தூர், ஈரோடு, பாண்டமங்களம் உள்பட மேலும் 10 தர்மச்சாலைகள் உருவாகிறது.

தீபம் அறக்கட்டளையின் சார்பில் இயங்கி வரும் தர்மச்சாலைகள் மூலம் தினசரி காலையில் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு கஞ்சி வார்த்தலும், மதியம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தலும் நடைபெற்று வருகிறது. தயாள உள்ளம் கொண்ட தங்களின் பெருந் தயவினாலும், வள்ளல் பெருமானின் பெருங் கருணையினாலும் 8ம் ஆண்டாக மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த புண்ணியத் தொண்டில் தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் பங்கு பெற்று கிடைப்பதற்கரிய உன்னதமான ஆன்மநேய அறப்பணிகளுக்கு அரிசி, பருப்பு, மற்றும் மளிகை பொருட்கள் போன்ற பொருட்களை அருளாக மாற்றியும், நிதியை மதியாக மாற்றியும் வாரி வழங்கி எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருங்கருணையில் தாங்களும் பாகம் பெற தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 8 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 9 தருமச்சாலைகள் மூலம்**

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து**
**நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 9 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ. 12, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,20,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

# 94440 73635 / 2244 2515

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

## Deepam Trust

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**
**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**

**மண்ணினில் நாற்றம் வகுத்து அதில் பல்வகை**
**அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி (374)**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## தீபம் அறக்கட்டளையின் நிர்வாகிகள் குழு


M. பாலகிருஷ்ணன்
நிறுவனர்


K. முத்துக்குமரன்
அறங்காவலர்


A.G. பாண்டுரங்கன்
அறங்காவலர்


B.K. கோவர்த்தணன்
அறங்காவலர்



C. பரமதயாளன்
அறங்காவலர்


உத்தம் சந்த்
அறங்காவலர்


K.N. உமாபதி
ஆலோசகர்


இராமச்சந்திர ராவ்
தணிக்கையாளர்


G. பாண்டியன்
தலைவர்


பாம்பன் அருள் சந்திரன்
து. தலைவர்


V. பாரதி
பொதுச்செயலாளர்


D. ஆனந்த்
பொருளாளர்


J. ரமேஷ்
து. செயலாளர் (அன்னதானம்)


வேல்முருகன்
து. செயலாளர் (அன்னதானம்)


B. புஷ்பா
து. செயலாளர் (கல்வி)


P. ஜோதீஸ்வரி
து. செயலாளர் (கல்வி)

மண்ணினில் பற்பல வகைகருநிலை இயல்
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி (376)

## தீபம் அறக்கட்டளையின் நிர்வாகிகள் குழு



J. ஜானகி
து. செயலாளர் (கல்வி)



S. கணபதி
து. செயலாளர் (மருத்துவம்)



S. கோபால்
து. செயலாளர் (மருத்துவம்)



R. சுப்ரமணியன்
து. செயலாளர் (தீபநெறி)



R. நாராயணமூர்த்தி
து. செயலாளர் (தீபநெறி)



P. ஆனந்த்
து. செயலாளர் (வெளியுறவு)



K.N. செந்தில் குமார்
து. செயலாளர் (வெளியுறவு)



V. கௌதம்
காப்பாளர்



C. ராமன்
காப்பாளர்



சிவானந்தம்
காப்பாளர்



N. குமரகுருபரன்
காப்பாளர்



S. மாதவன்
காப்பாளர்



J. கண்ணபிரான்
உறுப்பினர்



N. வெங்கடேஸ்
உறுப்பினர்



குமரேசன்
உறுப்பினர்



B. ராஜா
உறுப்பினர்



K. ஆனந்த்
உறுப்பினர்

**மண்ணினில் ஐந்தியல் வகுத்து அதில் பல்பயன்**
**அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (378)**

## தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகள்

1. தினசரி காலை 9 தருமச்சாலைகள் மூலம் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு கஞ்சி வார்த்தல் நடைபெற்று வருகிறது.
2. தினசரி மதியம் நித்ய தீப தருமச்சாலை மற்றும் நடமாடும் தருமச்சாலை மூலம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல் நடைபெற்று வருகிறது.
3. மாதந்தோறும் வறுமையால் வாடும் பார்வையற்ற குடும்பங்களுக்கு அரிசி, மற்றும் மளிகை பொருட்கள் (வாழ்வாதார) ஆயுட்கால வாழ்வாதார உதவியாக கடந்த ஆறு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.
4. மாதந்தோறும் (வறுமையால் வாடும்) நோயினால் வருந்தி, வறுமையால் வாடும் டயாலிஸிஸ் சிகிச்சைக்காக ஆயுட்கால உதவியாக பலருக்கு கடந்த ஐந்தாண்டுகளாக மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.
5. ஆண்டுதோறும் வறுமையால் வாடும் கிராமப்புற மாணவர்களின் (நன்றாக தேர்ச்சி பெற்ற) எதிர்கால வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மேற்படிப்புக்காக பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கப்பட்டு வருகிறது.
6. மாதந்தோறும் வடலூர் சத்திய தர்மச்சாலையில் பூச நன்னாளில் 40 மாதங்களாக தீபத்தின் தன்னார்வ தொண்டர்களும், சேவடிகளும் பங்கு பெற்று சமையல் மற்றும் பசியறாற்றுவிக்கும் சேவையும் செய்து வருகிறது.
7. மாதந்தோறும் பூச நன்னாளில் வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் இரவு 8.00 மணியளவில் ஆறு திரை நீக்கி ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது.
8. வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் பொருட்டு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் மற்றும் கூட்டு வழிபாடு நடைபெறுகிறது.
9. விரைவில் மேலும் 10 தருமச்சாலைகள் தமிழகத்தின் பிற பகுதியிலும் விரிவாக்கம் செய்ய எண்ணியுள்ளது.

**பஞ்சமில்லா பாரதம் படைப்போம்!**
**பசுமையான உலகத்தைக் காண்போம்!!**

---


### சென்னை வேளச்சேரி

# நித்ய தீப தருமச்சாலை

கடந்த 8 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு வருகை தந்து, ஜோதி தரிசனம், மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தையும் அன்புடன் அழைக்கிறோம்!

**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**
**02.05.2017 (செவ்வாய் கிழமை) இரவு 8.00 மணிக்கு**
**இடம் : நித்ய தீப தருமச்சாலை**

7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை – 600 042


**மண்ணிடை அடிநிலை வகுத்து அதில் பன்னிலை**
**அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (380)**

# நடமாடும் நித்ய அன்ன தருமச்சாலை



சென்னை வேளச்சேரியில் நாள்தோறும் தீபம் அறக்கட்டளையின் சார்பாக
நடமாடும் நித்ய அன்ன தருமச்சாலையின் மூலம் பசியாற்றுவிக்கப்படும் அற்புதக்காட்சி




கோவையில் நடந்த ஞானசபை திறப்பு விழாவில் கலந்து கொண்ட தயவு. மேடா நித்தியானந்தம் அய்யா அவர்களுடன்
தீபத்தின் நிர்வாகிகளும் மற்றும் தயவு இராமதாஸ் அய்யா.

RNI : TNTAM/2010/35284 R.No.TN/CC(S)Dn/412/17-19

"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO.TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 8. | Date of Publication : 20th of Every Month

## சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில்
## அருளமுதமாய் தயாரான அறுசுவை உணவு பதார்த்தங்கள்



To
Shri / Smt / Dr

Posted at Patrika Channel
Posted on 27-4-2017
Egmore, Chennai - 8

If undelivered Please Return to :

# DEEPAM TRUST

(REDG. No. - 2035/07)

No. 30, Drowapathi Amman Koil Street (Next to Mosque), Velachery, Chennai - 600 042. Phone : 044 - 2244 2515
Cell : 94440 73635 | E-mail : admin@deepamtrust.in | Web : www.deepamtrust.in

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan